**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2024**
**A021 இலக்கணம் – 2 (சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு: பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சொல் என்னும் பொருளைத்தரும் வேறு சொற்கள் யாவை?
2. இலக்கண வகையால் சொற்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
3. பால் என்பதன் பொருள் என்ன?
4. காரணப் பெயர் என்றால் என்ன? சான்று தருக.
5. எச்சம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. இறந்தகால வினையெச்ச வாய்பாடுகள் யாவை?
7. இடைச்சொல் எத்தனை வகைபடும்?
8. எதிர்காலம் காட்டும் இடைநிலைகள் யாவை?
9. சாரியைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. உவம உருபுகள் எத்தனை வகைப்படும்?
11. வினாப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் யாவை?
12. உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் எத்தனை?
13. உரிச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
14. ஆறுசுவைகளும் எவ்வகைப் பொருளின் குணப்பண்புகள்?
15. மூவகைச் சொற்கள் யாவை?

**பிரிவு – 2** **(5x3=15)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

1. பொது மொழி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
2. இருபால் பொதுப்பெயர் என்றால் என்ன?
3. தற்கிழமை என்றால் என்ன? சான்று தருக.
4. உரிச் சொல்லின் இலக்கணம் யாது?
5. ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்றால் என்ன? எ.கா. தருக.
6. பொருள்கோள் என்றால் என்ன?
7. இயற்பெயரையும் சிறப்புப் பெயரையும் சொற்றொடர்களில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?
8. கொளல் வினா என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்கள் பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வேற்றுமையின் வகைகள் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

2. (அ) வினைச் சொல்லின் பொது இலக்கணம் கூறுக.

(அல்லது)

(ஆ) காலம் காட்டும் இடைநிலைகள் குறித்தெழுதுக?

3. (அ) பலகுணம் தழுவிய உரிச்சொல் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) வினா மற்றும் அதன் வகைகள் குறித்து விளக்குக.

***